

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி தொகுதியில் இலவச வீட்டுமனை பட்டாக்களை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அவர்களது இல்லங்களை தேடிச்சென்று வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் மோகன சந்திரன், அவைத்தலைவர் க.தனராஜ், ஒன்றிய செயலாளர்கள் டி.எஸ்.டி. முத்துவேல்,சித்தேரி சிவா, நா.கவியரசு, பொதுக்குழு உறுப்பினர் கலைவாணி மோகன், காஞ்சித்துரை, இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் வி.கே.எம்.முருகானந்தம், தகவல் தொழில்நுட்ப அணி பைங்காநாடு இளையராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் அரசு அதிகாரிகள், பொதுமக்கள் உடன் இருந்தனர்.

### கழக புதிய உறுப்பினர் சேர்ப்பு: தொகுதி வாரியாக தகவல் தொழில்நுட்ப அணி மூலம்

# பி.எல்.ஏ.2 - பி.டி.ஏ. இணைய தள செயலி பயிற்சி முகாம்!

## தருமபுரி கிழக்கு மாவட்டச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் அறிக்கை!

தருமபுரி, ஜூன் 25 - தருமபுரி கிழக்கு மாவட்டச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க 01.06.2025 அன்று மதுரையில் நடைபெற்ற பொதுக்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சிறப்பு தீர்மானமான மண் மொழி மானம் காத்திட "ஓரணியில்; தமிழ்நாடு" என்ற கழக புதிய உறுப்பினர் சேர்க்கை திட்டத்தை இணையதள செயலி மூலம் செயல்படுத்த சட்டமன்றத் தொகுதி வாரியாக தருமபுரி மேற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி மூலம் வாக்குச்சாவடி முகவர் (BLA-2), பூத் டிஜிட்டல் ஏஜெண்ட்கள்(BDA) பயிற்;சி முகாம் கீழ்க்காணும் இடங்களில் நடைபெறும்.



நாள்: 26.06.2025 (வியாழக்கிழமை) வ.எண், நேரம் சட்டமன்றத் தொகுதி பயிற்சி நடைபெறும் இடம் விவரம் வருமாறு:

இக்கூட்டம் காலை 10.00 மணி பாப்பிரெட்டிப்பட்டி தொகுதி - நாராயணசாமி திருமண மண்டபம், பாப்பிரெட்டிப்பட்டி யிலும்,

2. காலை 10.00 மணி அரூர் தொகுதி கொங்கு வேளாளக்கவுண்டர்கள் திருமண மண்டபம், அரூரிலும்,

3. காலை - 10.00 மணி பாலக்கோடு தொகுதி பி.எம்.குப்புசாமி ராஜம்மாள் திருமண மண்டபம், பெரியாம்பட்டி, காரிமங்கலத்திலும் நடைபெறுகிறது.

அதுசமயம், நாடாளுமன்ற உறுப்பினர், அந்தந்த தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய மாவட்ட செயலாளர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட மற்றும் பேரூர் கழக அமைப்பாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் சார்பு அணிகளின் (BLA-2), பூத் டிஜிட்டல் ஏஜெண்ட்கள்(BDA), பாக இளைஞரணி நிர்வாகிகள், ஒன்றிய, பேரூர் கழக இளைஞரணி நிர்வாகிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் அனைவரும் அந்தந்த சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட இடங்களில் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்



சேலம் மத்திய மாவட்டம் ஓமலூர் வடக்கு ஒன்றியம் முள்ளி செட்டிப்பட்டி பா.ம.க. வினர் 80 பேர் அக்கட்சியை விட்டு விலகி மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர். இரா.இராஜேந்திரன். முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். உடன் மாவட்டக் கழகப் பொருளாளர். மு. கார்த்திகேயன், தொகுதி பொறுப்பாளர்கள். பார். இளங்கோவன். இ.ஜி.சுகவனம். ஒன்றியச் செயலாளர் பாலசுப்பிரமணியன் ஆகியோர் இருந்தனர்.



சேலம் மத்திய மாவட்டம் ஓமலூர் சட்டமன்றத் தொகுதிக்கான ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை நிகழ்ச்சி மற்றும் பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான இரா. இராஜேந்திரன் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார். உடன் மாவட்டப் பொருளாளர் மு.கார்த்திகேயன், தொகுதி பொறுப்பாளர்கள் பார். இளங்கோவன், ஈ.ஜி. சுகவனம், ஒன்றிய செயலாளர்கள் ஏ.சி.எம். செல்வகுமரன, ஓ.எம்.ரமேஷ், கே.சி. ரவிச்சந்திரன், பேரூர் செயலாளர் ரவிச்சந்திரன், செல்வதுரை உட்பட கழக நிர்வாகிகள் இருந்தனர்.



நாமக்கல் மோகனூர் சாலையில் உள்ள நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமை அலுவலகத்தில், நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் முன்னிலையில் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குனராக சந்தானம் பொறுப்பேற்றார். அவரின் பணி சேர் அறிக்கையினை மண்டல இணைப்பதிவாளர் க.பா.அருளரசு வழங்கினார். இந்நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளரும், நிர்வாக குழு உறுப்பினருமான பெ.நவலடி, மாமன்ற உறுப்பினரும், நிர்வாக குழு உறுப்பினருமான குட்டி (எ) செல்வகுமார் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் உடன் இருந்தனர்.



நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நேற்று முன்தினம் (23.06.2025) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு நகர்ப்புர உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவன தலைவர்/ அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், முனைவர்.எஸ்.விஜயகுமார், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு கழகத்தின் நிர்வாக இயக்குநர் கே.விவேகானந்தன், புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகம், மேலாண்மை இயக்குநர் ஹனிஷ் சாப்ரா, சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர்.டி.ஜி.வினய், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் கிரண் குராலா, நகராட்சி நிர்வாக இயக்குநர் எஸ்.சிவராசு மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பாசிச மக்கள் விரோத பா.ஜ.க.வின் முயற்சியை முறியடிக்க

# அனைத்து ஜனநாயக சக்திகளும் ஓரணியில் திரள வேண்டும்!

## தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, ஜூன் 25 - தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

இந்து முன்னணி சார்பில் மதுரையில் நடைபெற்ற முருக பக்தர்கள் மாநாடு எதிர்பார்த்தபடியே அரசியல் ஆதாயத்தை அடையும் நோக்கில் நடைபெற்றுள்ளது. நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குறுதியின்படி யாரும் அரசியல் பேசமாட்டோம் என்று சொன்னதை மீறுகின்ற வகையில், அதில் உரையாற்றிய ஆந்திர மாநில துணை முதலமைச்சர் பவன் கல்யாண் உள்ளிட்ட தமிழக பா.ஜ.க. தலைவர்கள், முருக பக்தர்கள் மாநாடு என்ற போர்வையில் பகிரங்கமாக தமிழக பா.ஜ.க.விற்கு ஆதரவாக அந்த மாநாட்டை தேர்தல் பிரச்சாரக் கூட்டமாக மாற்றி விட்டார்கள்.

அதுமட்டுமல்லாமல், மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அப்பட்டமான அரசியல் நோக்கம் கொண்டவையாக இருக்கிறது. பெரும் சர்ச்சைக்குள்ளான திருப்பரங்குன்றம் மலை உச்சியில் தீபத் தூணில் கார்த்திகை தீபம் ஏற்ற அறநிலையத்துறையை வலியுறுத்தியதோடு, முருகப் பெருமான் எழுந்தருளியிருக்கும் திருப்பரங்குன்றம் மலையின் புனிதத்தை காப்பாற்ற வேண்டுமென்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக மதநல்லிணக்கத்தை சீர்குலைக் கின்ற முயற்சியில் பா.ஜ.க. ஈடுபட்டிருக்கிறது.

மேலும், இந்து சமய அறநிலையத்துறையை அரசின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்க வேண்டுமென்றும் மாநாட்டில் கோரிக்கை எழுப்பப்பட்டிருக்கிறது. இதன்மூலம் தமிழக வரலாற்றை அறியாத அரைவேக்காடுகள் இத்தகைய கோரிக்கைகளை தீர்மானங்களாக நிறைவேற்றியுள்ளனர்.



தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, பிரிட்டீஷ் ஆட்சிக் காலத்தில் சென்னை மாகாணம் என்று இருந்த போதே, 1817-இல் திருக்கோயில்களின் வருமானத்தையும், நிர்வாகத்தையும் ஒழுங்குபடுத்துவதற்கு மதராஸ் நிலைக் கொடைகள் மற்றும் வாரிசுயின்மையில் அரசுப் பொருட்கள் ஒழுங்குபடுத்தும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன் மூலம் திருக்கோயில்களுக்கு வழங்கப்படும் நிதியுதவி மற்றும் சொத்துக்கள் ஒழுங்குபடுத்தப்படுவதோடு, அரசின் நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. அதனைத் தொடர்ந்து 1925-இல் இந்து பரிபாலனச் சட்டம், 1927-இல் இந்து சமய அறநிலைய வாரியம் அமைக்கப்பட்டன.

1947-இல் நாடு விடுதலைக்கு பிறகு 1951-இல் இந்து சமய அறக்கொடைகள் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதே சட்டம் பல திருத்தங்களுடன் தமிழ்நாடு இந்து சமய அறக் கொடைகள் சட்டம் 1960 ஏப்ரல் மாதத்தில் காங்கிரஸ் ஆட்சியில் அமலுக்கு வந்தது. இதன் மூலம் இந்து சமய திருக்கோயில்களை நிர்வகிப்பதற்காக தனியாக இந்து சமய அறநிலையத்துறை உருவாக்கப்பட்டது. இதன் முதல் தலைவராக சர் சி.பி. ராமசாமி ஐயர் பொறுப்பேற்று செயல்பட்டதை இன்றைய பா.ஜ.க.வினர் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

இந்து சமய அறநிலையத்துறை ஏறத்தாழ 100 ஆண்டுகளைக் கடந்து இமாலய சாதனைகளை புரிந்து, திருக்கோயில்களுடைய வருமானம் கடவுளின் பெயரால் முறைகேடுகள் நடப்பது முற்றிலும் தடுக்கப்பட்டு வருகிறது. இதை சகித்துக் கொள்ள முடியாதவர்கள், மதுரை முருக பக்தர்கள் மாநாட்டில் இந்து சமய அறநிலையத்துறையை அரசிடமிருந்து பறித்து தனியாரிடம் கொடுக்க வேண்டுமென்று சொல்வதை வன்மையாக கண்டிக்கின்றேன்.

கடந்த 4 ஆண்டுகளாக இந்து சமய அறநிலையத்துறை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பி.கே. சேகர்பாபு அவர்களின் நிர்வாகத்தின் கீழ் ஆன்மீகப் புரட்சியே நடைபெற்று வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள 36,425 கோயில்கள் மற்றும் 56 மடங்களுக்கு சொந்தமான சொத்துக்கள் மிகச் சிறப்பாக பராமரிக்கப்பட்டு, மக்கள் பேராதரவுடன் வழிபாடு நடைபெற்று வருகிறது. ரூ.186 கோடி செலவில் 93 திருக்கோயில்களில் புதிய இராஜ கோபுரங்கள், ரூபாய் 350 கோடி செலவில் 87 புதிய திருமண மண்டபங்கள், ரூபாய் 131 கோடியில் 147 புதிய அன்னதான கூடங்கள் என தமிழ்நாட்டின் திருக்கோயில்களில் ஏழை, எளிய மக்கள் நலன் சார்ந்த பல்வேறு நற்பணிகள் நாள்தோறும் நடைபெற்று நாடே பாராட்டி வருகிறது.

இதுவரை 3118 குட முழுக்குகள் நடத்தப்பட்டுள்ளது. 7598 ஏக்கர் நிலம் மீட்கப்பட்டு அதன்மூலம் ரூபாய் 7689 கோடி மதிப்புள்ள சொத்துகள் இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. இதை சகித்துக் கொள்ள முடியாத பா.ஜ.க. பரிவாரங்கள் இந்து முன்னணி என்கிற பெயரில் முருக பக்தர்கள் மாநாடு என்ற போர்வையில் அப்பட்டமான அரசியல் மாநாட்டை நடத்தியிருக்கிறார்கள்.

இது அரசமைப்புச் சட்டத்தையும், நீதிமன்றத் தீர்ப்பையும் அவமதிக்கும் செயலாகும். அரசியலையும், மதத்தையும் கலந்து தேசிய அளவில் அரசியல் ஆதாயம் தேடிய பா.ஜ.க., தமிழ்நாட்டில் கடவுள் பெயரை பயன்படுத்தி, தமிழகத்தில் உள்ள மக்களை பாசிச வலையில் சிக்க வைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. இதற்கு தமிழ்நாட்டு மக்கள் நிச்சயம் இரையாக மாட்டார்கள்.

தமிழ்நாட்டிலுள்ள திருக்கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டும் என்று பெற்ற உரிமையை நிறைவேற்றுவதை தடுக்கிற வகையில் தமிழ்க் கடவுள் முருகனுக்கு புரியாத சமஸ்கிருத மொழியில் அர்ச்சனை செய்வதற்கு ஆதரவாக இருக்கிற ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க.வினர் தமிழ்க் கடவுள் முருகன் பெயரை உச்சரிப்பதற்குக் கூட தகுதியற்றவர்கள்.

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற சட்டத்தை மதிக்காமல் அதற்கு தடையாக இருக்கும் இந்து மதத்தின் துரோகிகள். இவர்கள் இந்து மதத்தை சொந்தம் கொண்டாட என்ன உரிமை இருக்கிறது ? இந்து மதத்தில் உள்ள அனைத்துச் சாதியினரையும் சமமாக கருதாதவர்களை இந்து சமய விரோதிகள் என்று கூறாமல் வேறு எப்படி அழைப்பது ? இத்தகைய பாசிச மக்கள் விரோத பா.ஜ.க.விடமிருந்து இந்து மதத்தையும், தமிழ்க் கடவுள் முருகனையும் பாதுகாக்க வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு தமிழ்நாட்டு மக்களுக்கு இருப்பதை அனைவரும் உணர வேண்டும்.

இனிவரும் காலங்களில் இத்தகைய முயற்சிகள் நடைபெறுவதை முறியடிக்க சாதி, மத எல்லைகளைக் கடந்து அனைத்து ஜனநாயக சக்திகளும் ஓரணியில் திரள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர், தனது அறிக்கையில் கூறியுள்ளார்.




# தி.மு.க. இளைஞர் அணி



## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### இராமநாதபுரம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.சம்பத் ராஜா அறிவிப்பு!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும், கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றுவரும் நிலையில், மற்ற ஒன்றிய–நகர–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 25.06.2025 | முதுகுளத்தூர் பேரூர் | முதுகுளத்தூர் பேருந்து நிலையம் | கா.காயத்ரி |
| 2 | | முதுகுளத்தூர் மத்திய ஒன்றியம் | புளியங்குடி | நா.காயாம்பு |
| 3 | 26.06.2025 | அபிராமம் பேரூர் | சப்பாணி கோயில் அருகில் | மு.முஹம்மது அஸ்மத் |
| 4 | 27.06.2025 | சாயல்குடி பேரூர் | மூக்கையூர் சாலை சந்திப்பு | யோவான் மனுவேல் |
| 5 | 28.06.2025 | பரமக்குடி கிழக்கு ஒன்றியம் | வெங்கிட்டன்குறிச்சி | தனிமரக்காடு சம்பத்குமார் |
| 6 | 29.06.2025 | தொண்டி பேரூர் | புதிய பேருந்து நிலையம் | வா.சந்தானலட்சுமி |
| 7 | | சாயல்குடி மேற்கு ஒன்றியம் | செவல்பட்டி | மு.முஹம்மது அஸ்மத் |
| 8 | 30.06.2025 | இராமேஸ்வரம் நகரம் | ராமர் தீர்த்தம் | கா.காயத்ரி |

இராமநாதபுரம்

நாள் : 23.06.2025

கலைஞர் 100 1924 - 2023

